www.Padasalai.Net www.TrbTnpsc.com



வகுப்பு : 10 akwaacademy.blogspot.com தேர்வு எண் 1854

# முதல் திருப்புதல் தேர்வு, ஜனவரி – 2025

நேரம் : 3.00 மணி] **சமூக அறிவியல்** [மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 14x1=14

1. தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியில் இருந்து வேதாரண்யம் வரை உப்பு சத்தியாகிரக யாத்திரையை மேற்கொண்டவர் யார்?
அ) சி. ஆர். தாஸ் ஆ) மோதிலால் நேரு இ) சி. ராஜாஜி ஈ) எம். என். ராய்
2. ------ 1852 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்டோருக்கான முதல் பள்ளியை புனேயில் திறந்தார்.
அ) அய்யன்காளி ஆ) நாராயணகுரு இ) அன்னிபெசன்ட் ஈ) ஜோதிபா பூலே
3. சோட்டா நாக்பூர் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு
அ) 1910 ஆ) 1908 இ) 1915 ஈ) 1925
4. ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?
அ) சேம்பர்லின் ஆ) லாயிட் ஜார்ஜ் இ) வின்ஸ்டன் சர்ச்சில் ஈ) ஸ்டேன்லி பால்டுவின்
5. சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும்.
(i) பாளையக்காரர் முறை காகதீயப் பேரரசின் நடைமுறையில் இருந்தது.
(ii) கான்சாகிப்பின் இறப்பிற்குப்பின் புலித்தேவர் நெற்கட்டும் செவலை 1764–இல் மீண்டும் கைப்பற்றினார்.
(iii) கம்பெனி நிர்வாகத்திற்கு தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களோடு பேச்சவார்த்தையில் ஈடுபட்டதால், யூசுப்கான், துரோகி என்று குற்றம் சுமத்தப்பட்டு 1764–இல் தூக்கிலிடப்பட்டார்.
(iv) ஒண்டிவீரன் கட்ட பொம்மனின் படைப் பிரிவுகளில் ஒன்றைத் தலைமையேற்று வழிநடத்தினார்.
அ) (i) (ii) மற்றும் (iv) ஆ) (i) (ii) மற்றும் (iii)
இ) (iii) மற்றும் (iv) மட்டும் ஈ) (i) மற்றும் (iv) மட்டும்
6. கீழ்க்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையில் அமையாத கணவாய் எது?
அ) பாலக்காடு ஆ) போர்காட் இ) செங்கோட்டை ஈ) அச்சன் கோவில்
7. பெட்ரோலியத்தில் உள்ள முக்கிய கனிமங்கள் ஹைட்ரஜன் மற்றும் --------
அ) ஆக்ஸிஜன் ஆ) நீர் இ) கார்பன் ஈ) நைட்ரஜன்
8. இந்தியாவின் உயரமான புவி ஈர்ப்பு அணை
அ) ஹிராகுட் அணை ஆ) பக்ராநங்கல் அணை
இ) மேட்டூர் அணை ஈ) நாகார்ஜீனா சாகர் அணை
9. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
அ) நர்மதா ஆ) கோதாவரி இ) கோசி ஈ) தாமோதர்
10. பழனிமலையின் மிக உயரமான சிகரம் -------
அ) தொட்டபெட்டா ஆ) முக்குருத்தி இ) வந்தராவ் ஈ) மேல்பட்டு
11. இந்தியா தன் இரண்டாவது மிக நீளமான எல்லையை ------ நாட்டோடு பகிர்ந்து கொண்டுள்ளது.
அ) நேபாளம் ஆ) பூடான் இ) பாகிஸ்தான் ஈ) மியான்மர்
12. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்க முடியும்?
அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356 இ) சட்டப்பிரிவு 360 ஈ) சட்டப்பிரிவு 368
13. இந்தியாவில் உள்ள மூன்று நிலைகளான அரசுகள்
அ) மைய, மாநில மற்றும் உள்ளாட்சி ஆ) மைய, மாநில மற்றும் கிராம
இ) மைய, நகராட்சி மற்றும் பஞ்சாயத்து ஈ) ஏதுமில்லை
14. 1934 ஆம் ஆண்டில் ------ என்பவரால் GDPயின் நவீன கருத்து முதன் முதலில் உருவாக்கப்பட்டது.
அ) தாதாபாய் நௌரோஜி ஆ) அமர்த்தியா சென்
இ) முகஹப் – உல் ஹக் ஈ) சைமன் குஸ்நட்

பகுதி – II

II. எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
28 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். 10x2=20

15. கிழக்கு மற்றும் மேற்கில் அமையப்பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக.
16. புதுங்குக் குழிப் போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
17. "டாலர் ஏகாதிபத்தியம்" – தெளிவுபட விளக்குக.
18. தென்னிந்திய நல உரிமைச்சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

Scanned with CamScanner
Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

19. ஒத்துழையாமை இயக்கத்தை ஏன் காந்தியடிகள் திரும்பப் பெற்றார்?
20. புயலின் போது வானிலை மையம் மீனவர்களை எவ்வாறு எச்சரிக்கிறது?
21. இயற்கை எரிவாயு என்றால் என்ன?
22. தக்காண பீடபூமி குறிப்பு வரைக.
23. இடம் பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.
24. நடுவண் அரசின் அமைச்சர்கள் தரநிலைகளின் படி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்?
25. பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
26. தொழில்துறை தொகுப்பு என்றால் என்ன?
27. உலகமயமாக்கல் என்றால் என்ன?
28. கலடன் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டம் பற்றி நீவிர் அறிவது யாது?

## பகுதி – III

III. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.
42 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும். 10x5=50

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
    i) -------- கடன் குத்தகைத் திட்டத்தைத் தொடக்கி வைத்தார்.
    ii) சோட்டா நாக்பூர் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ------
    iii) ------- மாநிலம் இந்தியாவில் அதிக நிலக்கரி உற்பத்தியைச் செய்கிறது?
    iv) ------- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ஆகும்.
    v) GDP ------ பொருளாதாரத்தின் ஒரு குறியீடாகும்.
30. பொருத்துக.
    i) பிளிட்ஸ்கிரிக் – மாநில அரசின் தலைவர்
    ii) வடகிழக்குப் பருவக் காற்று – கரூர்
    iii) சூரிய சக்தி – அக்டோபர், டிசம்பர்
    iv) ஆளுநர் – மின்னல் வேகத் தாக்குதல்
    v) TNPL – ஆந்திரப் பிரதேசம்
31. அ) வேறுபடுத்துக.
    i) மேற்குக் கடற்கரைச் சமவெளி – கிழக்குக் கடற்கரைச்சமவெளி.
    ii) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலாத வளங்கள்.
    ஆ) காரணம் கூறுக. akwaacademy.blogspot.com
    i) கிழக்குத்தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.
32. வேலூரில் 1806 இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.
33. நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூக நீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும்.
34. இந்தியக் காடுகள் பற்றி விவரிக்கவும்.
35. நகரமயமாக்கல் என்றால் என்ன? அதன் தாக்கங்களை விளக்குக.
36. சாலைப் பாதுகாப்பு விதிகள் பற்றி எழுதுக.
37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
38. பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.
39. உலக வர்த்தக அமைப்பு பற்றி எழுதுக.
40. இந்தியாவின் வேளாண் கொள்கையின் சில முக்கிய நோக்கங்களை சுருக்கமாக எழுதுக.
41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
    1910 முதல் 1930 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42. உலக வரைப்படத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.
    (i) பிரிட்டன் (ii) ஜெர்மனி (iii) துருக்கி (iv) ஹவாய் தீவு (V) ஹிரோஷிமா

## பகுதி – IV

IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். 2x8=16

43. அ) இந்தியச் சமூகத்தின் புத்தெழுச்சிக்கு ராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினைத் திறனாய்வு செய்க.

(அல்லது)

ஆ) இந்திய மண் வகைகளைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.

44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.
    i) கிழக்கு தொடர்ச்சி மலைகள் ii) தாமிரபரணி ஆறு
    iii) அதிக மழைபொழியும் பகுதிகள் iv) காபி விளையும் பகுதி
    v) பன்னா உயிரிகோள பெட்டகம் vi) மலைக்காடுகள்
    vii) வடகிழக்கு பருவக் காற்று வீசும் திசை viii) பாலை மண் பகுதிகள்

Scanned with CamScanner